நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

வரத்து குறைவு : மாம்பழங்கள் விலை உயர்வு

First Published : 10 Jul 2012 01:08:09 AM IST



சென்னை, ஜூலை 9: மாம்பழங்கள் வரத்து குறைந்து வருவதால் அனைத்து ரகங்களும் விலை உயர்ந்து வருகின்றன. விரைவில் மாம்பழ சீசன் முடிவுக்கு வரும் என வியாபாரிகள் தெரிவித்தனர். சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மாம்பழ சீசன் இந்த ஆண்டு தாமதமாகத் தொடங்கியது. ஏப்ரல் மாதம் முதல் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத் தொடங்கின. அப்போது பங்கனப்பள்ளி, இமாம் பசந்த் உள்ளிட்ட ரகங்கள் ஒரு கிலோ ரூ.100 முதல் 110 வரை விற்கப்பட்டன. மற்ற ரகங்கள் ரூ.70 முதல் 90 வரை விற்கப்பட்டன.

மே மாதத்தில் இருந்து மாம்பழங்கள் வரத்து அதிகரித்ததால் பங்கனப்பள்ளி, இமாம் பசந்த் உள்ளிட்ட ரகங்கள் கிலோ ரூ.30 முதல் 40 வரை விற்கப்பட்டன. மேலும் பெங்களூரா, செந்தூரா, ருமானி, நீலம் உள்ளிட்ட ரகங்கள் கிலோ 20 ரூபாய் வரை விற்கப்பட்டன.தற்போது மாம்பழங்களின் வரத்து குறையத் தொடங்கியுள்ளது. இதனால் மாம்பழங்களின் விலை மீண்டும் உயர்ந்து வருகிறது. ஒரு கிலோ ரூ.30 வரை விற்கப்பட்ட பங்கனப்பள்ளி, இமாம் பசந்த் ஆகிய ரகங்கள் தற்போது 50 வரை உயர்ந்துள்ளது.

சில்லறை விலையில் பெங்களூரா, செந்தூரா, ருமானி, நீலம் உள்ளிட்ட ரகங்கள் ஒரு கிலோ ரூ.40 வரை விற்கப்படுகிறது. அதுவும் சாலையோர வியாபாரிகள் திருவள்ளூர், காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் உள்ள தோட்டங்களில் இருந்து வாங்கி வந்து அந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

மாம்பழங்கள் வரத்து குறித்து கோயம்பேடு பழக்கடை வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜெயராமன் கூறியது: கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாம்பழ சீசன் தாமதமாகவே தொடங்கியது. மேலும்

இந்த ஆண்டு மாம்பழங்கள் வரத்து குறைவாகவே இருந்தது. தற்போது வரத்து குறைவால் மீண்டும் விலை உயர்ந்துள்ளது என்றார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## சென்னையில் "பேக்கேஜிங்' துறைக்கான கருத்தரங்கம்

ஜூலை 09,2012,23:52



சென்னை: மத்திய அரசின் தொழில் மற்றும் வர்த்தக துறையின் கீழ் செயல்படும், இந்திய பேக்கேஜிங் பயிலகம் சார்பில், சென்னையில் இன்று கருத்தரங்கம் நடைபெறுகிறது.இது குறித்து, இப்பயிலகத்தின் இயக்குனர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் என்.சி.சாஹா, பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் கூறியதாவது:உலகின் பல நாடுகளுக்கு, இந்தியாவிலிருந்து, பழங்கள், காய்கறிகள், நறுமணப் பொருட்கள், கடல் உணவு பொருட்கள், பூ வகைகள் உள்ளிட்டவை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றை பாதுகாப்பான முறையில் அடைத்து வைத்து, ஏற்றுமதி மேற்கொள்வதற்கு, சிப்பமிடும் பணி முக்கியமானதாக உள்ளது.பயிலகத்தின் சார்பில், சிப்பமிடும் தொழிலுக்கான பயிற்சி, பரிசோதனை, ரசாயனம் உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதிக்கு தடையில்லா சான்றிதழ், ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.தற்போது, உள்நாட்டில், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிப்பமிடும் தொழில் நிறுவனங்கள் உள்ளன. இதில், 90 சதவீதம் குறு,

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களாகும். இந்தியாவில், சிப்பமிடும் தொழிலின் சந்தை மதிப்பு, 72 ஆயிரம் கோடி ரூபாய் என்றளவில் உள்ளது. சிப்பமிடும் தொழில் குறித்து, மும்பையில், வரும் 2013ம் ஆண்டு, ஜனவரி மாதம், கண்காட்சி நடைபெற உள்ளது. இவ்வாறு சாஹா கூறினார்.

## பருவமழை துவங்காததால் விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,00:04 IST

சங்கராபுரம் : பருவமழை துவங்காததால் சங்கராபுரம் பகுதியில் விவசாய சாகுபடியை துவக்க முடியாமல் விவசாயிகள் பாதிப்புள்ளாகியுள்ளனர்.

சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக செய்யப்பட்டு வருகிறது. ஏரி பாசனம், ஆற்றுப் பாசனத்தை நம்பாமல் பெரும்பாலான விவசாயிகள் கிணற்று பாசனத்தின் மூலம் விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு போதிய மழையின்மையால் ஏரி, குளங்கள் வறண்டன. இதனால் கிணறு

களில் நீர் மட்டம் வெகுவாக குறைந்தது.

மழையை எதிர்பார்த்து நாற்றுவிட்ட விவசாயிகள் சிலர் மட்டும் சொர்ணாவாரி சாகுபடியை துவக்கியுள்ளனர். அதற்காக உழவு ஓட்டும் பணி நடந்து வருகிறது. பெரும்பாலான கிராமங்களில் கிணறுகளில் விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் விவசாய பணியை துவக்கவில்லை.

கிணறுகளில் தற்போதுள்ள குறைந்த அளவு தண்ணீரை நம்பி ஒரு சில விவசாயிகள் மட்டும் தற்போது வயலை உழுது நாற்று நடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

போதிய மழை இல்லாததால் சங்கராபுரம் பகுதியில் 75 சதவீதம் விவசாய நிலங்கள் சாகுபடி செய்யாமல் கரம்பாகவே உள்ளது.

இந்நிலை நீடிப்பதால் இந்த ஆண்டு விவசாயம் செய்ய முடியுமா என ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## முட்டை விலை 4 நாளில் 33 காசுகள் சரிவு

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,01:26 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 300 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நான்கு நாளில் முட்டை விலை, 33 காசுகள் சரிந்திருப்பது, கோழிப்பண்ணையாளர்களை

கவலையில் ஆழ்த்தியுள்ளது.
நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 305 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள் குறைத்து, 300 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 4ம் தேதி, 333 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அதையடுத்து, 5ம் தேதி முட்டை விலை ஒரே நாளில், 13 காசுகள் சரிந்து, 320 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது. 7ம் தேதி, 15 காசுகள் சரிந்து, 305 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. பின், நேற்று ஐந்து காசுகள் சரிந்து, 300 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான்கு நாட்களில், முட்டை விலை, 33 காசுகள் சரிந்திருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:சென்னை, 315 காசுகள், பெங்களூரு, 305 காசுகள், மைசூரு, 302 காசுகள், ஹைதராபாத், 292 காசுகள், மும்பை, 324 காசுகள், விஜயவாடா, 290 காசுகள், கோல்கத்தா, 320 காசுகள், பார்வாலா, 270 காசுகள், டில்லி, 290 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 40 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## இயற்கை விவசாயத்துக்கு திரும்புங்கள்

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,01:28 IST

புதுக்கோட்டை: அதிக சத்து மற்றும் மருத்துவக் குணங்கள் நிறைந்த பாரம்பரியமிக்க நெல் ரகங்களை சாகுபடி செய்து மீண்டும் இயற்கை விவசாயத்துக்கு திரும்புமாறு விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அறைகூவல் விடுத்துள்ளார்.
புதுக்கோட்டை அடுத்த வாகைப்பட்டியில் ரோஸ் தொண்டு நிறுவனத்தின் சார்பில் பாரம்பரிய நெல் விதைகளை பாதுகாப்பது குறித்த விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடந்தது. இதை துவக்கிவைத்து இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது:உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக வெளிநாடுகளிடம் ஆலோசனைகள் பெற்று நவீன ரக தானியங்களை குறிப்பாக நெல் ரகங்களை அறிமுகம் செய்தனர். இவற்றை சாகுபடி செய்வதற்காக பல வகையான இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், வேளாண் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் விளைவாக நம் முன்னோர்கள் சாகுபடி செய்த பாரம்பரியமிக்க நெல் ரகங்கள் படிப்படியாக மறையத் துவங்கியது. ரசாயன உரங்கள்

மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்துவதால் மண் வளம் பாதிக்கப்பட்டு விளை நிலங்கள் பாலைவனங்களாக மாறிவருகிறது. கால்நடைகளுக்கு தீவன(வைக்கோல்) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக நவீன ரக நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசியை சமைத்து சாப்பிடும் மனித இனம் வித விதமான நோய் தாக்குதலுக்கு உள்ளாகி பரிதவித்து வருவதை காண முடிகிறது.

இந்த நிலை மாறவேண்டும் என்பதற்காக நம் முன்னோர்கள் பின்பற்றிய பயிர் சாகுபடி முறைகளை நாமும் பின்பற்றவேண்டியது அவசியமாகிறது. இதற்காக தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் பாரம்பரியமிக்க நெல் விதைகளை தேடி கண்டு பிடித்து அவற்றை இயற்கை விவசாய முறையில் சாகுபடி செய்து விதைகளாக மாற்றி விவசாயிகளுக்கு வழங்குவதென முடிவு செய்துள்ளோம். எங்களுடைய இந்த முயற்சி வெற்றி பெற்றுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சேகரிக்கப்பட்ட பூங்கார், மாப்பிள்ளை சம்பா, கருடன் சம்பா, பனங்காட்டு குறுவை, சிவப்பு கவுணி ஆகிய 5 வகையான பாரம்பரியமிக்க நெல் விதைகள் இயற்கை விவசாயத்தை மட்டுமே பின்பற்றி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் மருதாந்தளை, வாகைப்பட்டி, மாணிக்கம்பட்டி, வடசேரிப்பட்டி, மேலூர், கீழமுத்துடையான்பட்டி,, மேல முத்துடையான்பட்டி, முத்துக்காடு, சுந்தரக்காடு, மேலப்பளுவஞ்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 13 விவசாயிகள் கிட்டத்தட்ட 10 ஏக்கர் நிலத்தில் இவற்றை சாகுபடி செய்து மகசூலில் சாதனை படைத்துள்ளனர். இதன்மூலம் 300 மூடை நெல் ரகங்கள் கிடைத்துள்ளது. இவற்றை தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு விதையாக விற்பனை செய்து பரவலாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் துவங்கியுள்ளத. இவை தவிர செம்புளிச்சம்பா, சூரக்குறுவை, இலுப்பைப்பூ சம்பா, சண்டிகார், கருத்தக்கார் ஆகிய 6 வகையான பாரம்பரியமிக்க நெல் ரகங்களும் விரைவில் பரவலாக்கம் செய்யப்படும்.

பாரம்பரிய நெல் விதைகளை பொறுத்தமட்டில் வறட்சி மற்றும் வெள்ளத்தை தாங்கி வளரும் தன்மையுடையது. குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைக்கும். நேரடி விதைப்பு மற்றும் நடவுக்கு உகந்தது. மண் வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். உயரமாக வளரும் ஆற்றல் படைத்தது என்பதால் கால்நடைகளுக்கு தீவன(வைக்கோல்) தட்டுப்பாடு இருக்காது. நாம் தற்போது பயன்படுத்திவரும் அரிசி ரகங்களை விட பல மடங்கு புரதச்சத்து மற்றும் நார்ச்சத்து மிக்கது என்பதால் இவற்றை சமைத்து உண்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. எதிர்கால நம் சந்ததியினர் உடல் ஆரோக்கியத்துடன் நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என விரும்பினால் நம் முன்னோர்கள் பயன்படுத்திய பாரம்பரியமிக்க நெல் ரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகள் அனைவரும் முன்வரவேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

கருத்தரங்கில் தொண்டு நிறுவன இயக்குனர் ஆதப்பன், நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் ஆனந்த், இயற்கை விவசாயிகள் வீராண்டான், கோபாலகிருஷ்ணன், அப்பாவு பாலாண்டார், மருதச்சாமி, அன்பழகன், ஜீவானந்தம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## குன்னூர் தேயிலை ஏலத்தில் 81 சதவீத தூள் விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூலை 09,2012,20:53 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கம் சார்பில், நடந்த 27வது ஏலத்தில் 20.91 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.

இதில், இலை ரகம் 15.55 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.36 லட்சம் கிலோவும் அடங்கும்.

இதில், 16 லட்சத்து 93 ஆயிரத்து 710 கிலோ தேயிலை தூள் விற்பனையானது. இந்த வாரம் 81 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

சாதாரண இலை ரகத்துக்கு சராசரியாக ஒரு கிலோவுக்கு 60-64 ரூபாய் வரையிலும், உயர் ரகம் 100 ரூபாய் முதல் ரூபாய் 130 வரையிலும் விலை கிடைத்தது.

சாதாரண டஸ்ட் ரகத்துக்கு 63 முதல் 67 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 105 முதல் 127 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.

அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட் சி.டி.சி., டஸ்ட் ரக தேயிலை தூள் ஒரு கிலோ 141 ரூபாய்க்கு விற்பனையானது. சாம்ராஜ் எஸ்டேட் ஆர்தடக்ஸ் ரக தேயிலை அதிகபட்சமாக ஒரு கிலோ 217 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரம் தேயிலை விலையில், 4 ரூபாய் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த ஏலத்தில் ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். உள்ளூர் வர்த்தகம் சுமாராக இருந்தது.

இந்நிலையில்,வரும் வியாழன் மற்றும் வெள்ளி கிழமை நடக்கும் 28வது ஏலத்தில் 20.82 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் இலை ரகம் 15.29 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.53 லட்சம் கிலோவும் அடங்கும்.

## வரத்துகால்வாய் தூர்ந்ததால் விவசாயம் பாதிக்கும் நிலை

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,00:25 IST

திருவாடானை:திருவாடானை அஞ்சுக்கோட்டை கண்மாய் வரத்துகால்வாய் தூர்ந்துபோனதால் விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்படலாம், என விவசாயிகள் கவலைப்படுகின்றனர். திருவாடானை பகுதியில் இன்னும் சில நாட்களில் விதைப்பு பணிகள் துவங்கவுள்ள நிலையில் தற்போது விவசாயிகள் உழவு தொழிலில் ஈடுபட்டுள்ளனர். திருவாடானை அருகே அஞ்சுகோட்டை கண்மாயில், மழை பெய்து நிரம்பும் போது, அதிலிருந்து வெளியாகும் நீர் வரத்துக்கால்வாய் மூலம் ஆதியூர், அரும்பூர், திருவெற்றியூர் போன்ற 10க்கும் மேற்பட்ட கண்மாய்களுக்கு சென்று நிரம்பிய

பின்பு கடலில் கலக்கும்.
ஆனால் இக் கால்வாய் மராமத்து இல்லாமல் காட்டுகருவேல செடிகள் அடர்ந்துள்ளது. சில இடங்களில் மணல் மேடாகிவிட்டதால் மழை நீர் சுலபமாக ஓட முடியாத நிலையில் உள்ளது. இதனால் கண்மாய்கள் நிரம்ப வாய்ப்பில்லாமல் உள்ளதால், விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்படும். ஆகவே மழை காலத்திற்குள் இக் கால்வாய் தூர்வார பொதுபணித்துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## "காளான் வளர்ப்பு' தொழிலுக்கு வங்கிகடன் ஆலோசனை கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,00:34 IST

சிவகங்கை:சிவகங்கை ஐ.ஓ.பி., முன்னோடி வங்கியில் "காளான் வளர்ப்பு' பயிற்சியாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. முன்னோடி வங்கி மேலாளர் பெருமாள் தலைமை வகித்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) முத்துக்கிருஷ்ணன், மகளிர் திட்ட உதவி அலுவலர் சாந்தசீலன் முன்னிலை வகித்தனர். ஐ.ஓ.பி., முதன்மை மேலாளர் கருணாகரன், அனந்தராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். குன்றக்குடி விவசாய ஆராய்ச்சி மையத்தில், காளான் வளர்ப்பு பயிற்சி பெற்ற 20 இளைஞர்கள், தொழில் தொடங்குவதற்கான வங்கி கடன்களை பெறும் விதம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.
கிராம மித்ரா டிரஸ்ட் நிர்வாக இயக்குனர் ராம்குமார் நன்றி கூறினார்.

## மண் மாதிரி பரிசோதித்து பயிரிடவிவசாயிகளுக்கு வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,00:34 IST

சிவகங்கை:உர விலை அதிகரிப்பால் மண் பரிசோதனை செய்து பயிரிட விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.வயல்களில் நிழலான பகுதி, குப்பை கொட்டிய இடம், வாய்க்கால், பள்ளமான பகுதிகளில் மண் மாதிரி எடுக்கக் கூடாது. பயிரிடாத நிலையில் 5 இடங்களில் மண் மாதிரி எடுத்து, வெயிலில் போட்டு ,பக்கவாட்டில் மண்ணை குச்சியால் சுரண்டி எடுத்து, அரை கிலோ அளவு சுத்தமான பாலித்தீன் துணி பையில் போட வேண்டும். சிவகங்கை அல்லது அந்தந்த வேளாண்மை உதவி இயக்குனர் அலு வலக மண் ஆய்வு கூட த்தில் கொடுத்து பரி சோதிக்க வேண்டும். நெல், கரும்பு, கடலை, உளுந்து பயிர்களுக்கு முக் கால் அடியிலும், தோட்ட க்கலை பயிர் களுக்கு 3 அடியிலும் தனித்தனி மண் மாதிரி களை எடுத்து சோதிக்க வேண்டும். விலை உயர்வால் மண் பரி சோதனை அடிப்படை யில் உரமிட்டு, செலவை குறைக்குமாறு சிவகங்கை வேளாண்மை உதவி இயக்குனர் தனபாலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## உரக்கடைகளில் ரசாயன உரம் எடை குறைவா நெல்லையில் வேளாண் அதிகாரிகள் சோதனை!

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,02:28 IST

திருநெல்வேலி : உரக்கடைகளில் ரசாயன உரம் மூடை எடை அளவு குறைவாக இருப்பதாக வந்த புகாரையடுத்து வேளாண்மை துறை அதிகாரிகள் நெல்லை டவுன் உரக்கடைகளில் திடீர் சோதனை நடத்தினர். உரக்கடைகளில் விற்கப்படும் பொட்டாஷ் ரசாயன உரம் ஒரு மூடைக்கு 2 முதல் 3 கிலோ வரை குறைவாக இருப்பதாக வேளாண்மை துறை அதிகாரிகளுக்கு புகார்கள் சென்றன. இதையடுத்து நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) சவுந்திரராஜன், வேளாண்மை அலுவலர் இசக்கியப்பன் மற்றும் அதிகாரிகள் நெல்லை டவுனில் உள்ள உரக்கடைகளில் நேற்று திடீர் சோதனை நடத்தினர். சோதனையில் ரசாயன உரம் 400 முதல் 500 கிராம் வரை சில மூடைகளில் குறைவாகவும், ஒரு சில மூடைகளில் அதிகமாகவும் இருப்பது தெரியவந்தது. இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன் கூறுகையில், "விவசாயிகள் உரக்கடைகளில் உரம் வாங்கும் போது எடை போட்டு பார்த்து வாங்கவேண்டும். அளவு குறைவாக இருந்தால் வேளாண்மை அதிகாரிகளிடம் புகார் செய்யலாம் என்றார்'.

## உரம் விலை உயர்வை கட்டுப்படுத்திட வேண்டும் :உர வியாபாரிகள் சங்கம் வலியுறுத்தல்

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2012,02:27 IST

கடையநல்லூர் : "உரம் விலை உயராமல் அதனை கட்டுப்படுத்திட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என நெல்லை மாவட்ட உரம் வியாபாரிகள் சங்கம் சார்பில் வலியுறுத்தப்பட்டது. நெல்லை மாவட்ட உரம் வியாபாரிகள் சங்க கூட்டம் தலைவர் கடையநல்லூர் குலாம்முகைதீன் தலைமையில் நடந்தது. செயலாளர் கனகராஜ், பொருளாளர் ராஜகுரு முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விவசாய உரங்களுக்கு நியூட்ரான் அடிப்படையில் மானியம் வழங்குவதை நிறுத்தி உரத்தட்டுக்கள் அடிப்படையில் மானியம் வழங்க வலியுறுத்தி மத்திய அரசிற்கு கடிதம் எழுதிய தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. கடந்த 3 மாதங்களில் மட்டும் ஐந்து முறை உரம் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இதற்கான கட்டுப்பாட்டை தளர்த்தியதால் உர கம்பெனிகள் விலைகளை உயர்த்தி வருகின்றன. உரம் விலை உயர்வால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டு வருகிறது. எனவே மத்திய அரசு உடனடியாக உரம் விலை உயராமல் கட்டுப்படுத்திடவும், உயர்த்தப்பட்ட விலைகளை குறைத்திடவும் வலியுறுத்தப்பட்டது. மேலும் உரம் தயாரிப்பாளர்கள் லிங்க் செய்து பொருட்களை வினியோகம்

செய்யும் முறையை கைவிட வேண்டும் எனவும், இது தொடர்பாக தமிழக வேளாண்மை அமைச்சர் மற்றும் விவசாய செயலாளருக்கு மனு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர் பெத்துராஜ் நன்றி கூறினார்.

---

## கொங்குநாடு ஈமு அலுவலகம் திறப்பு

பதிவு செய்த நேரம்:2012-07-09 11:04:59

பரமத்திவேலூர், : பரமத்திவேலூரில் கொங்குநாடு ஈமு பவுல்ட்ரி பார்ம்ஸ்சின் விரிவு படுத்தப்பட்ட தலைமை அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் கொங்குநாடு ஈமு பவுல்ட்ரி பார்ம்ஸ்சின் விரிவு படுத்தப்பட்ட தலைமை அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு நிர்வாக இயக்குனர் தேவராஜ் தலைமை வகித்தார். இயக்குனர் சத்தியராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இயக்குனர்கள் அறிவழகன், நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக ராணுவ வீரர் கார்த்திக் கலந்து கொண்டு புதிய தலைமை அலுவலகத்தை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட அரசு வழக்கறிஞர் ரவி, ஈரோடு தாமஸ்,

திருச்செங்கோடு மனோகரன், விஜய ஆர்ட்ஸ் நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேலாளர் சந்திரசேகரன் நன்றி கூறினார்.

தலைமை அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்ட முதலீட்டாளர்களுக்கு நிர்வாக இயக்குனர் தேவராஜ் நினைவு பரிசுகளை வழங்கினார்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில்

# 2-வது சீசனுக்காக 2½ லட்சம் மலர் செடிகள் நடவு

ஊட்டி, ஜூலை.10–

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2– வது சீசனுக்காக $2^{1}/_{2}$ லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கப்பட்டது. இந்த பணியை தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மோகன் தொடங்கி வைத்தார்.

## தாவரவியல் பூங்கா

சுற்றுலா நகரமான ஊட்டியில் தாவரவியல் பூங்கா, படகு இல்லம், ரோஜா பூங்கா, தொட்டபெட்டா உள்பட பல்வேறு சுற்றுலா தலங்கள் உள்ளன. இதன் அழகை ரசிக்கவும், ஊட்டியில் நிலவும் கால நிலையை அனுபவிக்கவும் பல்வேறு இடங்களில் இருந்து தினமும் சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள்.

ஏப்ரல், மே மாதங்களில் நிலவும் கோடை சீசனை அனுபவிக்க பல்வேறு இடங் களில் இருந்துலட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். இவர்களை கவர்வதற்காக ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி உள்பட பல்வேறு விழாக்கள் நடத்தப்படுகிறது.

## 2-வது சீசன்

இந்த நிலையில் ஊட்டியில் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் 2–வது சீசன் நிலவும். இந்த சீசனுக்கு தேனிலவு சீசன் என்றும் பெயர்.

புதியதாக திருமணம் ஆன தம்பதிகள் பலர் இந்த சீசனை அனுபவிக்க ஊட்டிக்கு வருவதால் 2–வது சீசனை தேனிலவு சீசன் என்றும் அழைக்கிறார்கள். 2–வது சீசனுக்கு ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஊட்டி தாவரவியல் பூங்காவினை தயார்படுத்தும் பணியில் தோட்டக்கலை துறை அதிகாரிகள் ஈடுபட்டு உள்ளனர்.

## மலர் செடிகள் நடவு பணி

இதன் ஒரு பகுதியாக செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் பூங்காவில் பூக்கும் பூத்து குலுங்கும் வகையில் மலர் செடிகள் நடவு செய்யும் பணி நேற்று தொடங்கியது. இந்த பணியை நேற்று காலை தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மோகன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் உதவி இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் உள்பட பூங்கா அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து உதவி இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் கூறியதாவது:–

ஊட்டியில் 2–வது சீசன் காலமான செப்டம்பர், அக்டோபர், நவம்பர் காலங்களில் தாவரவியல் பூங்காவுக்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கும் வகையில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்படுகிறது.

## 2½ லட்சம் மலர் செடிகள்

ஆப்பிரிக்கன் மேரிகோல்டு ரகத்தில் மஞ்சள், ஆரஞ்சு, சால்வியா, அஜிரேட்டம், டேலியா, டெல்பீனியம், பிரஞ்சு மேரிகோல்டு, காஸ் மாஸ், கலிபோனியா பாபி, காலன்டூலா, லூபின், சேப்னரியா, டெய்சி, ஆஸ்டர், கான்டிடட்ப், சுவிட் வில்லியம், வெர்பினா, பிகோனியா, டையன்தஸ், பேன்சி, ஜினியா, வையோலா, சைனோ குளோஸம், சால்வியா உள்பட 52 ரகங்களில் மலர் செடிகள் நடவு செய்யப்படுகிறது.

மேலும் 10 ஆயிரம் தொட்டிகளிலும் மலர் செடிகள் நடவு செய்யப்படுகிறது. பூங்கா முழுவதும் $2^{1}/_{2}$ லட்சம் மலர் செடிகள் 2–வது சீசனுக்காக நடவு செய்யப்படுகிறது. இந்த மலர்கள் பூக்கும் காலத்தை கருத்தில் கொண்டு நடவு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நேற்று 2–வது சீசனுக்கான மலர் செடிகள் நடவு செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்ட போது எடுத்த படம்.